

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் ரூ.177.00 கோடி மதிப்பீட்டில் இரண்டு வழிச்சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல. பத்மநாபன், ஒன்றிய கழக செயலாளர் சு.சந்திரசேகர் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாநகரம் 27 வது வட்ட மாமன்ற உறுப்பினர் ஜெயந்தி அவர்களிடம் கல்லூரி மாணவி சுருதி கேட்டுக் கொண்டதற்கிணங்க கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.இராமச்சந்திரன் ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி மாணவி சுருதிக்கு மடிக்கணினி வழங்கினார். அப்போது ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கோட்டை பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.அரவிந்த், மாணவரணி துணை அமைப்பாளர் முகமது மீரான் ஆகியோர் உடன் இருந்தனர்.

## அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.662.29 இலட்சம் மதிப்பீட்டில் 1302 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், டிச. 11 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விழாவின் நேரலை அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சுபம் திருமண மண்டபத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டார். அதனைத்தொடர்ந்து, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் ரூ.662.29 இலட்சம் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை 1302 பயனாளிகளுக்கு வழங்கினார்.

முன்னதாக அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளினை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

19.02.2024 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள ஊரக பகுதிகளில் 8.04 இலட்சம் குடும்பங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் 4.02 இலட்சம் குடும்பங்களுக்கு அரசின் உதவிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து வழங்கி விரைவில் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்திட அரசு உறுதியாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தில் ஆதாவற்றோர், தனித்து வாழும் முதியோர். ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறப்புக் குறைபாடு உடைய குழந்தைகள் போன்ற சமூகத்தின் விளிம்புநிலையில் வாழ்ந்திடும் மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டு பிற துறைகளுடன் இணைந்து அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமின்றி கல்வி, வேலை வாய்ப்பு, திறன் மேம்பாடு, வீடுகள் போன்ற அனைத்து உதவிகளும் வழங்கப்படும். அரசிடம் உள்ள தரவுகள், கள ஆய்வு, மக்கள் பங்கேற்புடன் கலந்துரையாடல், கிராம சபை ஆகியவற்றின் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள மிகவும் ஏழைக்குடும்பங்கள் கண்டறியப்படும். அரசிடம் உள்ள தரவுகளின்படி, CMTS Mobile App மூலம் 15.09.2025 முதல் கிராமப்புறத்தில் உள்ள சமுதாய வள பயிற்றுநர்களின் உதவியுடன் கணக்கெடுப்பு நடத்தி மிகவும் ஏழை குடும்பங்களின் பல்வேறு அரசு துறைகளின் தேவைகள் கண்டறியப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இன்றையதினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் நடைபெற்ற அரசு விழாவில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தில் கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியதை தொடர்ந்து அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சுபம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் அரசு துறைகளில் சார்பில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தில் கல்வி, சுயதொழில் மற்றும் ரூ.662.29 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை 1302 பயனாளிகளுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

அதன்படி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 646 பயனாளிகளுக்கு ரூ.299.14 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், நகராட்சி துறை சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 30 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், தாட்கோ சார்பில் 201 பயனாளிகளுக்கு ரூ.138.82 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 71 பயனாளிகளுக்கு ரூ.71 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (கூட்டுறவு) சார்பில் 45 பயனாளிகளுக்கு ரூ.21.54 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், தமிழ்நாடு தொழில் வணிக துறை, மாவட்ட தொழில் மையம் சார்பில் 8 பயனாளிகளுக்கு ரூ.38.63 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை சார்பில் 24 பயனாளிகளுக்கு ரூ.8 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், வேளாண் மற்றும் பொறியியல் துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.3.15 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், முன்னோடி வங்கி சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1.38 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், தொழிலாளர் நலத்துறை சார்பில் 107 பயனாளிகளுக்கு ரூ.4.97 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், சமூக நலத்துறை சார்பில் 57 பயனாளிகளுக்கு ரூ.58.50 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.16,000 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் என மொத்தம் 1302 பயனாளிகளுக்கு ரூ.662.29 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சு.தேன்ராஜ், ஜெயங்கொண்டம் நகர்மன்றத் தலைவர் சுமதி சிவக்குமார், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பி.சுமதி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, ஜெயங் கொண்டம் நகர் மன்ற துணைத்தலைவர் வெ.கொ. கருணாநிதி, மாவட்ட நிலை அலுவலர்கள், இதர அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கோரிக்கையை ஏற்று – முதல்வர் அறிவிப்பு!

# வள்ளியூர் - திசையன்விளையில் - கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்!

## அரசாணை வெளியீடு! முதல்வருக்கு – பொதுமக்கள் – வழக்கறிஞர்கள் நன்றி!

சென்னை, டிச.11 -

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டுமெனும் பேரவைத் தலைவரும், இராதாபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்பாவு அவர்களின் கோரிக்கையினை முதலமைச்சர் அவர்கள் ஏற்று, சட்டமன்றத்தில் சட்டத் துறை அமைச்சர் மூலம் அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம் திறப்பதற்கான அரசாணை அறிவிப்பினை தற்போது வெளியிட்டுள்ளார்கள். அதுபோல், பேரவைத் தலைவர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று திசையன்விளையிலும், Cumcourt திறப்பதற்கு ஏற்கெனவே அரசாணை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு நீதிமன்றங்களையும் திறப்பதற்கு அரசாணை அறிவிப்பு வெளியிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் நன்றியைத் தெரிவிப்பதோடு, மிக விரைவிலேயே இரண்டு நீதிமன்றங்களும் திறக்கப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## திருவெறும்பூர் தொகுதி துவாக்குடி,

# நவல்பட்டு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணனிடம் மனு!

திருச்சி, டிச.11-

மீன் வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களை தலைமை செயலகத்தில் சந்தித்து திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தனது திருவெறும் பூர் தொகுதிக்கு உட்பட்ட நவல்பட்டு துவாக்குடி பகுதிகளில் கால்நடை மருத்துவமனை அமைத்து தர ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டுடார்.



திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான முனைவர் அன்பில்மகேஸ்பொய்யாமொழி தனது திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட துவாக்குடி மற்றும் நவல்பட்டு கிராமப் பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள் விவசாயத்தை நம்பி உள்ளவர்கள். அவர்கள் வளர்க்கும் கால்நடைகளை பராமரிக்கவும், சிகிச்சையளிக்கவும் மருத்துவமனை வெகு தொலைவில் இருக்கும் காரணத்தினால் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். எனவே அப்பகுதியைச் சுற்றியுள்ள கிராம விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் துவாக்குடியிலும், நவல்பட்டு கிராமத்திலும் தலா ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்து தர ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

## நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# அங்கன்வாடி, முதியோர் இல்லத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

நாமக்கல், டிச. 11 -

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நல்லாசியுடன், கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு, நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் ஆணைப்படி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் ஆலோசனைப்படி இராசிபுரம் நகரக் கழக செயலாளர் என்.ஆர்.சங்கர் வழிகாட்டுதலோடு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் அங்கன்வாடி பள்ளி, ஆதரவற்றோர் முதியோர் இல்லம், பயணிகள் ஆட்டோ தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.கார்த்திக் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தி.மு.க. இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார், இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர் மற்றும் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் ஆகியோர் கலந்து கொண்டு, வார்டு எண் 23 அரசு அங்கன்வாடி பள்ளியில் பாய் மின்விசிறி குழந்தைகளுக்கான எடை இயந்திரம் குழந்தைகள் பயன்படுத்தும் உபகரணம், இராசிபுரம் நகரம் காட்டூர் ரோடு அனைத்தும் கரங்கள் ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் காலை உணவு மற்றும் பயணிகள் ஆட்டோ தொழிலாளர்களுக்கு காக்கி சீருடை ஆகியவற்றை வழங்கினர்.

இந்நிகழ்வில் மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் ராஜேஷ் பாபு, இராசிபுரம் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பாண்டியன், லவக்குமார், வார்டு பாக அமைப்பாளர் வினோத், வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் சதீஷ், சந்தோஷ், சரவணன், அருள் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சஞ்சய், மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட மரமங்கலத்துப்பட்டி ஊராட்சியில் கணபதி நகர் பகுதியில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி., தார்ச்சாலை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், ஒன்றிய செயலாளர் சதீஷ்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் விஜயா மணிமாறன், கீரப்பாப்பம்பாடி செந்தில் , சந்திரமோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கோட்டூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல் தலைமையில்

# மாவட்ட முன்னாள் செயலாளர் மறைந்த கோட்டூர் அ. ராசசேகரன் நினைவு நாள்!

## நினைவுதின அமைதி ஊர்வலம் - கழக நிர்வாகிகள் பங்கேற்பு!

திருவாரூர், டிச. 11 -

திருவாரூர் மாவட்ட முன்னாள் செயலாளர் மறைந்த கோட்டூர் அ.ராசசேகரன் அவர்களின் 13 வது ஆண்டு நினைவஞ்சலி அமைதி ஊர்வலம். கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் பால. ஞானவேல் தலைமையிலும் அவைத்தலைவர் ராயர்பெர்னாண்டோ மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் மதியழகன் , சிவகுமார் , தமிழ்ச் செல்வன், கஸ்தூரி மதியழகன்,மாவட்ட பிரதிநிதிகள் நித்யானந்தம், பரணிக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற்றது.

கழக செயல்வீரராகவும் ,கோட்டூர் ஒன்றியத்தின் ஒருங்கிணைந்த செயலாளராகவும், திருவாரூர் மாவட்டக் கழக செயலாளராகவும், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவராகவும் திகழ்ந்து கழகத்திற்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்து, கர்மவீரராக திகழ்ந்த கோட்டூர் அ.ராசசேகரன் அவர்களின் 13 வது ஆண்டு நினை வஞ்ச லியை முன்னிட்டு அமைதி ஊர்வலம் கோட்டூர் காந்திசிலை அருகிலிருந்து புறப்பட்டு, ஒன்றிய தி.மு.க. அலுவலகம் வரை நடை பெற்றது.

பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த அமரர் கோட்டூர் அ.ராசசேகரன் அவர்களின் திரு உருவப் படத்திற்கு கழக நிர்வாகிகளும், தோழர்களும் மலர்மாலை அணிவித்துவீரவணக்கம் செலுத்தினர் . இந்த நினைவஞ்சலி நிகழ்வில் ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல் தலைமையில் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள்,கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரியம், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை,புதிய அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு நலவாரியம் மறு சீரமைக்கப்பட்டது அதன் அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுக்கா பா.பவுன்துரை மாற்றுத்திறனாளி நலவாரிய உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்தார்.